# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலத்தின் 24-ஆம் ஞாயிறு | 13 செப்டம்பர் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: **குடும்பம்: தேடிச்சென்று உதவுதல்**

# மலேசியா ஆயர் பேரவை 2026 வார றுதி

ந்த வார றுதியில், மலேசியாவில் உள்ள திருஅவை, மலேசியா ஆயர் பேரவை (MPC) 2026-க்காக சிபுவில் ஒன்று கூடுகிறது. செப்டம்பர் 9 முதல் 13 வரை, சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியா ஆகிய ஒன்பது மறைமாவட்டங்களிலிருந்து சுமார் 800 பங்கேற்பாளர்கள், கொண்டாடுவதற்கும், செவிமடுப்பதற்கும், ஒரே மலேசியத் திருஅவையாகப் பயணிப்பதற்கும் ஒன்றுகூடியுள்ளனர்.

இது ஒரு வரலாற்றுத் தருணம். முதன்முறையாக, மலேசியா முழுவதிலுமிருந்து குருக்கள், துறவிகள் மற்றும் பொது மக்கள், நமது நாட்டில் திருச்சபையைத் தூய ஆவியானவர் எங்கு வழிநடத்தக்கூடும் என்பதை அறிந்துகொள்வதற்காக ஒரு தேசிய ஆயர் பேரவையில் ஒன்றுகூடியுள்ளனர்.



Celebrate Listen Walk (cf Is 2:2-5)
MPC2026

ஆயினும், MPC2026 என்பது சிபுவில் உடல்ரீதியாகப் பங்கேற்பவர்களுக்காக மட்டுமல்ல. எனவே, இந்த வார இறுதியில், நாம் அவர்களுக்கு மனதார ஆதரவளிப்போம். ஒவ்வொரு பங்கும், குடும்பமும், அதிச க்களும் மற்றும் திருஅவை ஊழியர்களும் இறைவேண்டலின் வழியாக கைகொடுப்போமாக. ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவறத்தார், பொதுநிலையினர், இளைஞர் பிரதிநிதிகள், குடும்பங்கள், ஒருங்கிணைப்பாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் நிகழ்வுக்குப் பின்னால் இருந்து பணியாற்றும் அனைவருக்காகவும் நாம் இறைவேண்டல் செய்வோம். நாம் அனைவரும் சிபுவில் இல்லாவிட்டாலும், இறைவேண்டுதலின் வழியாக நாம் ஒன்றாகப் பயணிக்க முடியும்.

இந்த வார இறுதியில் நடைபெறும் MPC2026-ல் மூன்று பரந்த இயக்கங்கள் நடைபெறுகின்றன.

முதலாவதாக, இது மலேசியாவில் உள்ள கத்தோலிக்கத் திருஅவையின் ஒன்றுகூடல் ஆகும்.

இந்த ஒன்றுகூடல் ஏற்கெனவே முக்கியத்துவம் வாய்ந்தது. சபா, சரவாக் மற்றும் தீபகற்ம மலேசியா ஆகிய இடங்களிலிருந்து அருள்பணியாளர்கள், துறவறத்தார், மற்றும் பொதுநிலையினர், ஒரே இடத்தில், ஒரே திருஅவையாக மன்றாடுகிறார்கள். இது ஒன்றிப்பின் ஒரு உறுதியான வெளிப்பாடு. நாம் ஒன்றுகூடும்போது, ஒருவருக்கொருவரின் பன்முகத்தன்மை, கலாச்சாரச் செழுமை, மேய்ப்புப் பணி சார்ந்த யதார்த்தங்கள், போராட்டங்கள் மற்றும் வாழ்ந்து அனுபவித்த நம்பிக்கை அனுபவங்களை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டாவதாக, இது கொண்டாடுதல், செவிமடுத்தல் மற்றும் ஒன்றாகப் பயணித்தல் ஆகியவற்றின் மூலம் பகுத்தறியும் ஒரு காலமாகும்.

MPC2026 என்பது வெறும் அறிக்கைகள் அல்லது சாதனைகளைப் பற்றியது மட்டுமல்ல. அது ஒருவருக்கொருவர் மற்றும் தூய ஆவியானவருக்குச் செவிமடுப்பதற்கான ஒரு களம். இறைவேண்டல், உரையாடல், தியானம் மற்றும் பகிரப்பட்ட பகுத்தறிவு ஆகியவற்றின் மூலம், தூயஆவியானவர் எங்கே செயல்பட்டிருக்கிறார் என்பதையும், இன்று மலேசியாவில் திருஅவையை அவர் எங்கே வழிநடத்தக்கூடும் என்பதையும் திருஅவை அறிந்துகொள்ள முயல்கிறது.

இந்த மாநாடு பூஜ்ஜியத்திலிருந்து தொடங்கவில்லை. இது பங்கு, மறைமாவட்டம், மற்றும் பிராந்திய மட்டங்களில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் மீது நிற்கிறது. அருள்பணியாளர்கள், துறவறத்தார், இளைஞர்கள், மறைமாவட்டம் மற்றும் பிராந்திய மேய்ப்புப் பணி சபைகளின் பலன்களே இந்தத் தொடர்ச்சியான பகுத்தறிதலின் முதுகெலும்பாக அமைகின்றன.

மூன்றாவதாக, இது ஒரு தூதுரைப்பணிக்கு அனுப்பிவைத்தல் ஆகும்.

MPC2026 என்பது பயணத்தின் முடிவல்ல. சிபுவில் பகுத்தறியப்படுபவை நமது மறைமாவட்டங்கள், பங்குத்தளங்கள், குடும்பங்கள், அடிப்படை கிறிஸ்துவ சமூகங்கள் (BECs), திருச்சபைப்பணிகள் மற்றும் சமூகங்களுக்குத் திரும்ப வேண்டும்.

ஆகவே, இந்த வார றுதியில் நிறைவடையும் MPC2026-க்காக நாம் மன்றாடுவோம். சிபுவில் கூடியுள்ள ஒவ்வொரு இதயத்தையும் வழிநடத்தவும், ஒரே மலேசியத் திருஅவையாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்லவும் தூய ஆவியானவரிடம் கேட்போம்.

### இன்றைய இறைவார்த்தை:

சீராக்கின் ஞானநூல் 27: 30-28;7
திருப்பாடல் 103: 1- 4, 9-12
உரோமையர் 14: 7-9
மத்தேயு 18: 21-35

### இறைவேண்டல்:

இறைவா, 2026 மலேசிய ஆயர் பேரவையில் பங்கேற்கும் அனைவரையும் வழிநடத்தும். ஆழ்ந்து செவிமடுப்பதற்கும், உண்மையுடன் பகுத்தறிவதற்கும், மலேசியத் திருஅவைய நீர் எங்கு வழிநடத்துகிறீரோ அங்கு நம்பிக்கை வைப்பதற்கும் அவர்களுக்குக் கற்றுக்கொடும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org